AstroVed

மாலை: 1

# சத்வித்யா

மலர்: 1

எஸ்பி -75, சிட்கோ தொழில்துறை எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600058.

ஆன்மீக
விஞ்ஞான இதழ்

இணையதளம்
வாயிலாக
மாதம் ஒரு முறை
வெளிவரும்



## பதவிகளை தரும் சிவபெருமான்

★ ஜூலை மாத ராசிபலன்கள் ★ மூலிகை ரகசியம்

★ எந்திரத்தின் மகிமை ★ செவ்வாய் தோஷம்

அனைத்து இதழ்களையும் AstroVed.com இணையதளத்தில்
இலவசமாக டவுன்லோடு செய்து பயன் பெறலாம்
மேலும் விபரங்களுக்கு போன்: 95004 95008, www.astroved.com


AstroVed

# சத்வித்யா



ஆன்மிகத்தேடலோ, எந்த ஒரு விஷயத்திலும் ஏற்படும் உந்துதலோ திடீரென இந்தப் பிறவியில் வருவது அல்ல!
இதெல்லாம் முன்ஜென்மத்திலே தீர்மானிக்கப்பட்டவை விட்டகுறை தொட்டகுறை என்கிறோமோ அது போல போன ஜென்மத்தின் தொடர்ச்சியே இந்த ஜென்மத்தின் தேடல்கள் மற்றும் விளைவுகள் ஆகும்.

~ Dr. Baskaran Pillai







அன்பான இணையதள நேயர்களுக்கு,

நமது தேசமே ஒரு ஆன்மிக பூமி ஆன்மிகம் பற்றி அறிந்துகொள்ள வேண்டும் என்னும் ஆவல் நம் அனைவருக்குமே இருக்கும். அந்த வகையில் இன்றைய சூழலில் இணையதளம், வளைத்தளம் என இயங்குவோர் பயன்பெறும் வகையில் Astroved இணையதளம் இந்த சத்வித்யா என்னும் இணையதள இதழை வெளியிடுகிறது.
இவ்விதழில் இறையருள் நிறையப்பெற்ற ஆலயங்கள், அவற்றின் மகிமைகள், புராண, இதிகாச நிகழ்வுகள், பலதரப்பட்ட மக்களும் பயன்பெறும் வகையில் ஜோதிடம், வாஸ்து, எண்கணிதம், இதுவரை அறியாத ஆன்மிக தகவல்கள் மற்றும் ரகசியங்களை இந்த சத்வித்யா இ-புக்கில் தொகுத்துத் தருகிறோம். தூய உள்ளமே இறைவன் வாழும் இல்லம் என்பதை உணர்ந்து, அனைவரும் இந்த இணையதள புத்தகத்தை பயன்படுத்தி இறையருள் பெற வேண்டுகிறோம். மாதம் இருமுறை இ-மெயிலில் இவ்விதழ் வெளிவரும்.

இறையருளோடு,

அச்சிட்டு வெளியிடுவோர் ஆஸ்ட்ரோவேட்.காம்

## விநாயகர் பூஜை!

எந்தப்பூஜையைச் செய்தாலும் முதல் பூஜை, விநாயகருக்குத்தான்.விநாயக வழிபாட்டிலும் அறுகம்புல் முக்கி யமான இடத்தை - முதல் இடத்தைப் பிடித்திருக்கிறது. ஏன் என் பதை, ஒரு கதை மூலம் காணலாம்.



எமனுடைய பிள்ளை "அனலாசுரன்" என்பவன். அவன் பெற்ற வரம் அபூர்வமானது, யாரும் தெரியாமல் அவரவர் உடல்களில் புகுந்து, அவர்களின் உயிர்ச்சத்தை உறிஞ்சி விடுவதுதான் அந்த அனலாசுரன் பெற்ற வரம். தற்போது மனிதர்கள் அறியாமல், அவர்களின் உடல்களில் புகுந்து ஆட்டிப்படைக்கிறதே ஒரு புதிய நோய்ஞூ அதுபோல, யாரும் அறியாமல் அனைவரையும் ஆட்டிப் படைத்துக் கொண்டிருந்தான் அனலாசுரன். பூவுலகை ஆட்டிப்படைத்த அவன் தேவலோகத்தில் புகுந்தான். தேவர்கள் நடுங்கினார்கள்ஞூ"ஐந்து கரத்தனே ஆனை முகத்தனே அச்சம் தவிர்த்து அருள்புரி ஐயா"எனவேண்டிப் புலம்பினார்கள்.

அதே விநாடியில், "அஞ்சாதீர்கள்" எனும் குரலைத் தொடர்ந்து, கண்டவர் மனம் களிக்குமாறு சற்று கட்டைகுட்டையான ஓர் அழ கான அந்தண வடிவம் அங்கு தோன்றியது.



அந்த நேரத்தில் அங்கு வந்தான் அனலாசுரன்.தேவர்கள் நடுங்கிப்போய், அழகு வாலிபனின் பின்னால் ஒளிந்தார்கள். அவர்களை இகழ்ச்சியாக அனலாசுரன் பார்த்த அதே நேரத்தில், எதிரில் இருந்த அந்தண வடிவம் மறைந்து, அங்கே விநாயகர் நின்றார்.

"அனலாசுரா! எல்லையிலாத உலகங்கள் எல்லாம் என் வயிற்றில் இருக்கின்றன.நீ அங்கு போய், உன் ஆட்டத்தை வைத்துக்கொள்" என்ற விநாயகர், துதிக்கையை நீட்டி அனலாசுரனை வளைத்து இழுத்து, அப்படியே விழுங்கினார்.

அப்போதே உலகம் முழுதும் விவரிக்க முடியாத ஒரு பெரும் கொதிப்பு பரவியது. அனைவரும் துடித்தார்கள். "அனலாசுரன் பெயருக்குத் தகுந்தாற்போல், அனல் கக்கு கிறான்.ஐங்கரன் திருமேனி

குளிர்ந்தால்,அனைத்துலகங்களும் குளிரும்ளூ துயர் நீங்கும்” என்று தீர்மானித்த தேவர்கள், பலவிதங் களிலும் விநாயகர் திருமேனியைக் குளிர்விக்க முயன்றார்கள்.

சந்திரன் அமுதமயமான குளிர்ந்த கதிர்களை வீசினான்ளூ பாம்புகள் குளிர்ச்சி என்பதால், பாம்புகளை எடுத்து விநாயகர் திருமேனியில் சுற்றினார்கள். ஊஹும்! எதுவும் பலனளிக்கவில்லை.

அந்த நேரத்தில்,சப்த ரிஷிகள் ஆளாளுக்கு இருபத்தொரு அருகம் புற்களை விநாயகர் மீது சாற்றினார்கள். விநாயகர் திருமேனி அப்போதே குளிர்ந்ததுளூ உலகமும் குளிர்ந்தது. அன்று முதல் விநாயகருக்கு, "காலஅனலப் பிரசமர்" எனும் திருநாமம் உண்டானது. அருகம்புல் விநாயக வழிபாட்டில் முதலிடம் பிடித்தது. நம்மை அறியாமலே, பலவிதமான நிகழ்வுகளால் நம் உடல் கொதிப்படையும். அவ்வாறு கொதிப்படைந்தால், நம் செயல்களுகளில் தடுமாற்றம் உண்டாகும்.பிறகு?சொல்ல வேண்டுமா? இந்தப் பிரச்சனையில் இருந்து நம்மைக் காப்பாற்றுவது



பக்க விளைவுகள் இல்லாதது "அருகம்புல்". அருகம்புல் கஷாயம், அருகம்புல் சாறு என்றெல்லாம் சொல்கிறோமே உடல் கொதிப்பை நீக்கி, ஆரோக்கியத்தை அளிப்பது அருகம்புல்.

யாரும் அறியாமல் அவரவர் உடல்களில் புகுந்து,கேடு விளைவித்த அனலாசுரனை அழித்து தேவர்களைக் காத்ததைப்போல, நம் அனைவரையும் இப்போது ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கும், புது விதமான நோயிலிருந்து நம்மையும் காக்குமாறு விநாயகப் பெருமானை வேண்டுவோம்

~ PN பரசுராமன்

விஞ்ஞானம், மெய்ஞானம் இரண்டும் முரண்பட்டவை அல்ல மரத்தின் வளர்ச்சிக்கு வேர் எப்படி முக்கியமோ மனித வாழ்வின் வளத்திற்கு மூளையே முக்கியமானது. வேரில்லா மரம் வளர்ச்சி அடையாது மூளை சரியாக வேலை செய்யவில்லை என்றால் ஒரு மனிதனால் வாழ்வில் உயர முடியாது மனிதன் என்பவன் தலைகீழாய் வளரும் மரம் போன்றவன். மரத்திற்கு வேரும் மனிதனுக்கு மூளையும் முக்கியமானது.

யானை, குரங்கு, டால்பின், ஆகியவற்றின் மூளையில் உள்ள நியூட்ரான் மனித மூளையில் உள்ளது போலவே அமையப்பெற்றது விநாயகர், அனுமன் வழிபாடுகள் பிறந்தது இப்படித்தான் என்பதை விஞ்ஞான பூர்வமாக மெய்ப்பிக்க முடியும்.


# பதவிகளைக் கொடுக்கும் திருத்தலம்

தென்னாடுடைய சிவன் என்ற சொல்லுக்கு ஏற்ப தென் பகுதியாம் தமிழகத்தில் உள்ள சிவாலயங்கள், தொன்மையானவன் மட்டுமல்ல பல்வேறு சிறப்புகளையும் பெருமைகளையும் கொண்டவை! ஒவ்வொரு சிவாலயத்திற்கும் ஒவ்வொரு சிறப்புகள் உண்டு! அப்படிப்பட்ட சிறந்த திருத்தலங்கள் நாடிச்சென்று உள்ளன்போடு நம் வேண்டுதலை வைக்கும்போது அதை நிறைவேற்றித் தருகிறார், அடியார்க்கு அடியாரான இறைவன் ஈசன்!

ஒரு மனிதனுக்கு என்ன குறை உள்ளதோ, அந்த குறையை நிவர்த்தி செய்யும் திருத்தலம் எது? சிவபெருமானின் எந்த அம்சம் நம் பிரச்சினையை தீர்க்கும் என்பதை அறிந்து அந்தந்த தலங்களை நன்கு அறிந்து அத்தலத்திற்கு சென்று வழிபடும்போது குறை என்பது துரிதமாக தீர்த்துவிடும் என்பது திண்ணம்!

பசு பால்தரும் என்பது உண்மை! அதற்காக பசுவின் காலில் பால் வருமா? காம்பில் கறந்தால் தான் பால்வரும்! அதுபோல, இறைவன் அருள் மாயமானவன் என்றாலும் எந்தப் பிரச்சினைக்கு எந்தந்த தலத்தில் உறையும் இறைவன் அருள்புரிவான் என்பதை அறிந்தே நம் வழிபாடு அமைய வேண்டும்! தரும் என்பது உண்மை!

இன்று நாம் பார்க்கவிருக்கும் ஆலயம், பதவிகள் அருளும் பரமநாதர் ஆலயம்! பதவிக்கு ஆசைப்படாதோர் எவரும் இருக்க, முடியாது!





பதவி என்றால் அரசியல் பதவி மட்டும்மல்ல: உத்தியோகம் செய்யும் இடத்தில் கிடைக்க வேண்டிய பதவி, சூழ்ச்சியினால் இழந்த பதவி, மக்களுடைய செல்வாக்கினால் கிடைக்கும் பதவி என முறையாகக் கிடைக்கவேண்டிய பதவிகளை எந்தத்தடையும் இல்லாமல் அருளுகின்ற பரமன் இங்கே பரமநாதர் என்ற திருநாமத்தோடு அன்னை வாலாம்பிகை சமேதராய் காட்சி தருகிறார்.

இந்த பரமநாதர் தன்னை உன்மனதோடு வணக்கும் யாவர்க்கும் வற்றாத கருணையை வாரி வழங்குபவர். இருந்த தலத்தில் தங்கியிருந்து பரமநாதரை உள்ளன்போடு துதித்து, கடுமையான பக்தி செலுத்திய கடுவெளி சித்தருக்கு தன் அருவுருவான சிவலிங்கத் திருமேனியை பிளந்து தன் அருள்மேனி காட்டி ஆட் கொண்டவர்.

இவ்வாலயத்தில் கடுவெளிச் சித்தரின் ஜீவசமாதி பீடம் அமைத்துள்ளது

## “நந்தவனத்தில் ஓர் ஆண்டி”

”நந்த வனத்திலோர் ஆண்டி - அவன்
நாலாறு மாதமாய் குயவனை வேண்டி
கொண்டு வந்தான் ஒரு தோண்டி - மெத்தக்
கூத்தாடி கூத்தாடி போட்டுடைத்தாண்டி”



இந்த பாடலை வேடிக்கையான பாடல் என்றே நாம் பல ஆண்டுகளாக அறிவோம். ஆனால், இறைதத்துவத்தையும் மனித இயல்பையும் சித்தரிக்க கடுவெளிச்சித்தர் எழுதிய பாடல் தான் இது! இறைவன் மிகுந்த எதிர்பார்ப்போடு உருவாக்கிய மனித உடலை, எப்படி வீணாக்குகிறோம் என்பதை உணர்த்த கடுவெளிச்சித்தர் இந்தப்பாடலை இயற்றியிருக்கிறார்.

இறைவன் ஈசன் மீது பாசமும் பெருமளவு பக்தியும் கொண்ட இந்த சித்தர் இத்தலத்தில் உறையும் பரமநாதரை மனதாரத் துதிக்கிறார் அப்படி துதித்து இவர் எழுதிய பாடல்கள் ஏராளம்!



## கடுவெளி என்றால் என்ன

எவராலும் அடையமுடியாத காணமுடியாத கடுமையான பிரபஞ்ச வெளியே கடுவெளி என்பதாகும் இந்த பிரபஞ்ச வெளிதான் இறைவன் ஈசன் உறையும் வெளி என்பதை உணர்ந்து சித்தர் இந்த தலத்து இறைவனை மெய்யுருகி வணங்கினார் இவருடைய அளப்பரிய பக்தியையும் அன்பையும் மெச்சிய இறைவன் சித்தருக்குக் காட்சி கொடுத்தார் எப்படி தெரியுமா






## கல்லைப் பிளந்து வெளிப்பட்ட சிவன்

கடுவெளிச்சித்தரின் தீவிர பக்தியை மெச்சிய சிவபெருமான் அவருடைய பக்தியின் சிறப்பை உலகுக்கு உணர்த்தும் வண்ணம் இந்த ஆலயத்தில் இருந்த சிவலிங்கத்தைப் பிளந்து அதிலிருந்து தோன்றி சித்தருக்கு தரிசனம் கொடுத்தார் என்பதே இத்தலத்தின் சிறப்பு

## துணி துவைத்த கல்

சிவலிங்கத்தைப் பிளந்து அதிலிருந்து தோன்றி இறைவன் சித்தருக்கு காட்சி கொடுத்தது பல நூறு ஆண்டுகளுக்கு முன்னால்! இந்த நிகழ்வில் சிவலிங்கம் நான்கு துண்டுகளாக பிளந்திருந்தது.


கால ஓட்டத்தில், சில நூற்றாண்டுகளுக்குப் பின் இன்று ஆலயம் அமைந்திருக்கும் இடத்திற்கு எதிரே உள்ள சிவலிங்கத்தடி குளம் மக்கள் பயன்பாட்டில் உள்ளது. பிளந்த சிவலிங்கத்தின் சில துண்டுகள் இந்த குளத்தில் இருக்க, இதை என்னவென்று அறியாத மக்கள் இதை சாதாரண கல் எனநினைத்து துணி துவைக்கப் பயன் படுத்தியுள்ளனர்!



பல ஆண்டுகளுக்குப் பின், சில தீவிர சிவனடியார்களின் பெரு முயற்சியால் நான்கு துண்டுகளாய் பிளந்திருந்த சிவலிங்கம் கண்டறியப்பட்டு, வண்ணம் குலையாமல் அதனையே பொருத்தி இங்கு பிரதிஷ்டை செய்து வழிபட்டு வருகிறார்கள் பிளவுபட்ட சிவலிங்கமே இன்றும் இந்த ஆலயத்தில் வணங்கப்பட்டு வருவதோடு, இறைவனின் கருணைக்கு அத்தாட்சியாய் உள்ளது

சித்தர்கள் அனைவருமே கத்தியாம் அன்னையை வாலைக் குமரியாய் வணங்கும் வழக்கம் கொண்டவர்கள் அவ்வண்ணமே இங்கு அன்னை வாலாம்பிகை அருள்பாலித்து வருகிறார் கடுவெளிச்சித்தரின் கருணைபொங்கும் அழகிய சிலை, அடியார்களுக்கு காட்சி கொடுக்கிறது.

# பூராடம் நட்சத்திரம்





- பூராடம் நட்சத்திரத்திற்கு உகந்த தலம் இது இந்த நட்சத்திரக் காராகள் இங்கு வந்தால் நலம் பெறுவர்!
- ஜாதகத்தில் சூரிய கிரகத்தின் தோஷம் உள்ளோர் இங்குவந்து வழிபட தோஷம் நீக்கும்!
- இங்கு தீபம் ஏற்றி வழிபட முன்னோர் ஆசி கிட்டும்!
- பௌர்ணமி நாளில் அனைத்து தெய்வங்களும் பரமநாதரை வழிபட இங்கு வருவதால் பௌர்ணமியன்று வணங்கினால் சிறப்பு!

பரமநாதரை வணங்கி பதவிகள் பெறுவதோடு கடுவெளிச்சித்தரின் அருளைப்பெற இத்தலத்திற்கு வந்து வழிபடுவது சிறப்பு!

# அமைவிடம்

திருத்துறைப் பூண்டியிலிருந்து நாகப்பட்டினம் செல்லும் சாலையில் எடையூரில் இறக்கி அங்கிருந்து இரண்டு கிலோ மீட்டர் சென்றால் சித்தராலத்துர் என்னும் இத்திருத்தலத்தை அடையலாம்.



~ பன்னீர்செல்வம்

திரிபுரம் எரிந்த விரிசடைக் கடவுள் என்று சிவனை துதிபாடுகிறது புராணம். அதாவது, மூன்று அரக்கர்கள் வாழிந்த நகரங்களை சிவன் எரித்தார் என்பது புராணக் கூற்று இதன் விஞ்ஞான உண்மை என்னவென்றால் ஆணவம், கன்மம், மாயை என்றும் மும்மலங்களே அரக்கத்தனத்தை வளர்க்கும் காரணிகள் அவற்றை அழிக்க சிவனால் மட்டுமே முடியும். என்னவே சிவனை வணங்கி நலம் பெறுவோம் என்பதே விஞ்ஞான உண்மை.



# சித்தர்களின் சக்தி

எப்போதும் இல்லாத அளவுக்கு நம்நாட்டில் சித்தர்கள் வழிபாடு புத்துணர்ச்சி பெற்றுள்ளது என்பதனை நம்மால் மறுக்க இயலாது! இதற்குக் காரணம் என்னவென்று ஆராயும்போது சில அரிய ரகசியங்கள் வெளிப்படுகின்றன. சித்தத்தை சிவன்பால் வைத்து அஷ்டமாசித்தி களைப்பெற்று ஆண்டவனுக்கு நிகரான சக்தியைப் பெற்றவர்களே சித்தர்கள்!

தெய்வங்களால் கொடுக்க முடியாததைக்கூட சித்தர்கள் கொடுப்பார்கள் என்ற கூற்றும் இங்கே வேகமாக பரவி வருவதைக் காணலாம்! மனிதர்களாய்ப் பிறந்து மகான்களாய் மாறி சித்தத்தில் சிவத்தை ஏற்றி அழியாத உடலையும் ஆன்ம சக்தியையும் பெற்ற சித்தர்களின் பெருமையை அறிய வேண்டுமா?

இறைவனை வேண்டினால் எல்லாம் கிடைப்பதில்லை விதியின் வலிமையை உணர்ந்தே ஒருவருக்கு எதையும் கொடுக்க முடியும் என்பது இறைநியதி! ஆனால், தங்கள் தவ வலிமையினால் இறைவனின் திருவடியை அணுகியுள்ள சித்தர்கள், இறைவனிடம் நேரடியாக எதையும் எடுத்தியம்பக் கூடியவர்கள் இறைவனை ஆற்றுப்படுத்தி, வேண்டுகின்ற அடியார்களின் விருப்பங்களை நிறைவேற்றித் தருகின்ற ஆற்றலைப் பெற்றவர்கள்.

உள்ளன்போடு இறைவனைத் தொழுது தங்களுக்கு வழிகாட்டும் துணையாய் சித்த புருஷர்களை வேண்டிநிற்கும் அடியார்களின் வினைகளைத் தீர்க்கும் சித்து வேலைகளை செய்வதோடு, பக்தர்களின் சித்தத்தைத் தெளிவாக்கி, சீர்படுத்துவதோடு மூடத்தனமற்ற, தெளிவான பக்தி மார்க்கத்திற்கு வழிகாட்டும் சித்தர்களின் சக்தியை மெல்லமெல்ல மனிதர்கள் உணர்ந்து வருகிறார்கள். இதன் விளைவாகவே நாட்டில் சித்தர் வழிபாடு சிறந்த முறையில் வளர்ந்துவருகிறது.

~ பன்னீர்செல்வம்



# எண் கணிதத்தில் பெயர் எண்களின் சிறப்பு

எண்கணிதம் என்னும் நியூமராலஜியால் தனித்துவமும் உச்சபட்ச சக்தியைக் கொடுக்கும் எண்கள் பல உள்ளன அவற்றில் சிலவற்றைப் பார்ப்போம் ஒருவருக்கு 1 என்ற எண் வரும்படி பெயர் வைக்க நேர்ந்தால் 1, 10,19, 28, 37, 46, 55 என்று வரும்படி பெயர்வைப்பார்கள். 19 என்று வரும்படி பெயர் வைத்தாள் வயது ஏற ஏற இளமை கூடும் 37 என்று வரும்படி பெயர் வைத்தால் வேகமான முன்னேற்றம் மலைக்க வைக்கும் செல்வாக்கு இதோடு பெண்ணோ ஆணோ யாராக இருந்தாலும் எதிர்பாலினத்தவரால் முன்னேற்றம் உண்டு பேராசை மட்டும் இல்லாதிருந்தால் இவர்களின் முன்னேற்றம் பலமடங்கு உயரும்.



46 என்று வரும்படி பெயர்வைத்தால் உலகப்புகழ் பெறுவார்கள் இவர்கள் தலைக்கு நிச்சயம் கிரீடம் உண்டு 55 என்று வரும்படி பெயர் வைத்தால் முன்னேற்றம் என்பது மிகவும் மெல்லமெல்ல பொறுமையாக அமையும் நிலையானதாக இருக்கும் போராட்டத்திற்குப் பின் நிச்சயம் வெற்றி தேடிவரும்.

64 என்ற எண் வியாபார ரீதியாக பல மடங்கு வெற்றியைத் தரும், 73 என்ற எண்ணும் தொழிலில் மேன்மையைத்தரும், 2 எண் வரும்படி பெயர் வைக்கும் போது, 20 என்று வரும்படி பெயர் வைத்தால் எலக்ட்ரிகல் எலக்ட்ரானிக் போட்டோ ஒளிப்பதிவு போன்ற துறைகளில் நிபுணத்துவமும் முன்னேற்றமும் ஏற்படும். 29 என்று வருமாறு பெயர்வைத்தால் குறிப்பிட்ட வயதில் பெண்களால் பிரச்சனையில் சிக்குவார்கள் இதை தவிர பெரும்பாலும் 2 எண் வரும்படி பெயர் வைப்பதை அனைவருமே தவிப்பார்கள் தொடர்ந்து எண் கணிதத்தின் சிறப்பான அதிர்ஷ்ட எண்களை அடுத்தடுத்த இதழ்களில் பாப்போம்

~ பன்னீர்செல்வம்

ஆன்மிகம் என்னும் மெய்ஞானத்தில் காணப்படும் அனைத்துமே விஞ்ஞான உண்மைகள் தான்! பிரம்மனுக்கு நான்கு தலை, சிவனுக்கு ஐந்து தலை, முருகனுக்கு ஆறுதலை என்பதுதெல்லாம் வெறுமனே புராணக்கதை அல்ல இவற்றில் அறிவியல் உள்ளது ஆம்! இதை தலையின் எண்ணிக்கை என்று சொல்வதைவிட மூளையின் பகுதிகள் எனலாம். சிவனின் மூலையில் உள்ள ஐந்து பகுதிகள் இன்னின்ன செயல்பாடுகளை செய்யச் சிறந்தது, என்பதில் இருந்து அறியலாம்.

"கூறும் அடியார்கள் குறை தீர்க்கும் முகம் ஒன்று
குன்றுருவ வேல்வாங்கி நின்ற முகம் ஒன்று "

என்ற பாடலில் வகைப்படுத்தியுள்ளதே இதற்கு சான்றாகும்.

# மூலிகை ரகசியம்

பசுமையாய்த் தோன்றும் தாவர இனங்களைக் கண்டு, அவற்றை வெறுமனே இலை, தழை என்று சாதாரணமாய் நினைப்போர் உண்டு. ஆனால், இந்த இலை, தழைகள் அனைத்திற்கும் நோய்களைப் போக்கும் ஆற்றல் உண்டு, அவையெல்லாம் மூலிகைகள். ஒவ்வொரு மூலிகையிலும் ஒரு நோய் தீர்க்கும் ரகசியம் அடங்கியுள்ளது என்பதை ஞானத்தால் கண்டறிந்து உலகுக்கு தெரியப்படுத்தியவர்கள் நமது சித்த பெருமக்கள்! மூலிகைகளின் பண்பு மற்றும் நோய் தீர்க்கும் ஆற்றலை நேயர்களுக்கு தெரியப்படுத்துவதே இந்த மூலிகை ரகசியம்!

## ஆடாதோடை


ஆடாதோடையின் இலை தொண்டை மற்றும் நுரையீரல் தொடர்பான நோய்களுக்கு அருமருந்தாக விளங்குகிறது நுரையீரலில் சேர்ந்துள்ள கோழையை அகற்றி, ஆஸ்துமாவால் ஏற்படும் சுவாசபாதை சுருக்கத்தை நீக்கி, விரிவடைய செய்து சுவாசத்தை சீராக்குகிறது சர்க்கரை நோயை கட்டுக்குள் வைக்க உதவுகிறது இரத்தப் போக்கை கட்டுப்படுத்துகிறது சித்த மருத்துவம் ஆடாதோடையின் சிறப்பை இவ்வாறாக விளக்குகிறது.



"ஆடாதோடையின் குணத்தை அடைவுட னுரைக்கக் கேளும்
பாடாதநாவும் பாடும் பரிந்துமே தோடம் போகும்
வாடாத பித்தஞ் சேதம் ரோகங்கள் விலகிப்போகும்
நாடாது வியாதி தானும் நல்விழிக் குழலினா ளே"

ஆடாதோடை இலையை உபயோகிப்பதால் குரல்வளம் பெருகும் வியாதி அவர்களை நாடாது என்று விளக்கப்பட்டுள்ளது ஆடாதோடையின் இலை கஷாயம் இருமல், இளைப்பு போன்ற சுவாசகுழல் பிரச்சினைகளில் தீர்வளிக்கிறது. இதன் இலைசாறு 10முதல் 20துளிகளுடன் தேன்கலந்து உண்பதால் சுரம், இளைப்பு, இருமல் ஆகியவை கட்டுப்படுத்தப்படும், ஆடாதோடை இலையுடன் எட்டுபங்கு நீர்சேர்த்து கொதிக்க வைத்து ஒருபங்காக குறுக்கி, துணியில் நனைத்து ஒத்தமிட வீக்கம் குறையும்.

~ டாக்டர் கவிதா



# புத்தி கூர்மை தரும் எந்திரம்



நம்முடைய புத்தி அங்கலாய்பு அடையும் போது அதை சரி செய்ய மிக சரியான தீர்வு காண தியானம் வழிவகுக்கும் புத்தி சக்தி நன்றாக இருக்கும் பச்சத்தில் நம் கவலை சரியாக நடக்கும்.
எந்திரம் அண்டத்திலிருந்து சக்தியை கிரகித்து நமக்கு தருகிறது, அதன் மைய பகுதியில் நாம் தியானிக்கும்போது நமக்கு சக்தியை தருகிறது. கணபதி எந்திரம் நம்முடைய புத்தியை செம்மை படுத்தி நமக்கு நல்ல வழியை காண்பிக்க நம்முடைய புக்தியை நல்ல வழியில் எடுத்து சென்று நம்முடைய அனைத்து வேலையையும் சிறப்பாக செய்ய உதவுகிறது இதை பூஜிக்க, தியானிக்க நல்ல புத்தி, நல்ல படிப்பு, நல்ல சக்தி கிடைக்கும்.

# ஹோமங்களின் மகிமை

அக்கினியில் இடப்படும் எந்தப்பொருளும் அக்கினியாகவே மாறிவிடும். அதாவது, அக்கினிக்கு இரையாகிவிடும் எனவேதான் மானிடர்களுக்கு ஏற்படும் பிரச்சனைகள் எதுவாக இருந்தாலும் அதிலிருந்து விடுபட அக்கினியை உருவாக்கி ஹோமம் நடத்துவதை நமது வேத சாஸ்திரங்கள் அமைத்தன்

முறையான மந்திரங்கள், நெறிதவறாத கைதேர்ந்த புரோகிதர்களைக் கொண்டு இந்த யாகங்கள் நடத்தப்பட வேண்டும். அதோடு, யாகம் செய்வதற்கு உரிய நேரம் அதாவது ஹோரை மற்றும் சுப காலங்களை தேர்ந்தெடுத்து என்ன ஹோமம் நடத்துகிறோமோ என்ன பிரச்சினைக்காக ஹோமம் நடத்தப்படுகிறோதோ அதற்கான மூலிகைகளை அக்கினியில் இட்டு நடத்த வேண்டும். இப்படி சரியான முறையில் செய்யப்படும் யாகங்களில் நம் பிரச்சினைகள் பஷ்பமாகி, வாழ்வில் பளபளப்பு கூடும் என்பதை மகான்களும் ரிஷிகளும் உணர்த்தியுள்ளனர். அப்படிப்பட்ட யாகங்கள், அவற்றால் உண்டாகும் நன்மைகள் பற்றி இந்த பகுதியில் பார்ப்போம்.

## தடைகளை தகர்க்கும் சுதர்சன ஹோமம்

சுதர்சனம் என்பது பகவான் மகாவிஷ்ணுவின் கையில் உள்ள சக்கரத்தைக் குறிக்கும் என்பது அனைவருக்கும் தெரியும் பரந்தாமணின் கையில் சுழன்று தர்மத்தை நிலைநாட்ட, அதர்மத்தை கருவறுக்க, தீவினைகளைப் போக்கும் அந்த சுதர்சன சக்கரத்தினைப் போற்றி சொல்லப்படும்.



மந்திரங்களால் செய்யப்படும் இந்த ஹோமம் என்னென்ன பிரச்சினைகளை தீர்க்கும் என்று பார்க்கும்போது வியாபாரத்தடை, தொழில் வளர்ச்சியின்மை, எவ்வளவு திறமையாக தொழில் செய்தாலும் என்னவென்றே தெரியாத - இனம்புரியாத கஷ்டங்கள் உண்டாவது, வருமானம் எப்படி எங்கே போகிறது என்றே தெரியாமல் பணக்கஷ்டம் வருவது, காசு, மனம் எவ்வளவு இருந்தாலும் குடும்பத்தில் நிம்மதி இல்லாமை செய்கின்ற பரிகாரங்கள் கூட பலனளிக்காமல் போவது, கண்ணுக்குத் தெரியாத கஷ்டங்களான ஏவல், பில்லி, சூன்யம் இவற்றின் தாக்கங்கள்...இப்படி, நம்மை மீறி நடக்கும் அத்தனை துயரங்களுக்கும் தீர்வைத் தருவதே இந்த சுதர்சன ஹோமம்!

சூரியனைக் கண்டவுடன் பனி ஓடி மறைவதுபோல சுதர்சன ஹோமத்தால் அத்தனை கஷ்டங்களும் விலகும் என்பது ரிஷிகளின் முடிவு.

வாழ்க்கையில் சோர்ந்துகிடக்கும் யாரும் சுதர்சன ஹோமம் செய்கின்றபோது , அவர்கள் வாழ்வில் முன்னேற்றம் உண்டாகும் சுதர்சன ஹோமத்தால் கடவுளின் அருள் நிச்சயம் கிடைக்கும் என்பது நிதர்சனமான உண்மை.

~ PN பரசுராமன்



# செவ்வாய் தோஷம்

ஜாதகரீதியால் இன்று மிகப்பெரிய தோஷமாக எல்லோரையும் பயமுறுத்திக் கொண்டிருப்பது செவ்வாய் தோஷம் ஆகும். செவ்வாய் தோஷம் என்றால் என்னவென்று பார்க்கும்போது, ஒருவரது ஜனன கால ஜாதகத்தில் ராசி, லக்கனம் அல்லது களத்திரகாரகனான சுக்கிரன் நின்ற இடம், இவற்றிக்கு 2, 4, 7, 8, 12 ஆகிய இடங்களில் செவ்வாய் இருந்தால் அதுவே செவ்வாய் தோஷமாகும்.

இதிலும் விதிவிலக்குகள் உண்டு. அதாவது மேஷம், விருச்சகம், மகரம், கடகம் ஆகிய ராசிகளில் செவ்வாய் இருந்தால் பாதிப்புகள் குறைவாக இருக்கும் என்று கூறப்பட்டுள்ளது.

செவ்வாய் சிம்மத்தில் இருந்தாலும் பெரிய பாதிப்பு ஏதும் இருக்காது. மேலே சொன்னபடி 2, 4, 7, 8,12 ஆகிய இடங்களில் செவ்வாய் இருந்து அதை குரு பார்க்கும் பொழுது தோஷம் நிவர்த்தியாகும் என்றும் சொல்லப்பட்டுள்ளது

மங்களகாரகன் என்றும் பூமிகாரகன் என்றும் சொல்லப்படும் செவ்வாய், தோஷம் அடைந்தால் திருமண காரியத்தில் மிகப்பெரிய தடைகளை ஏற்படுத்துவார்! கெட்ட பெயரை ஏற்படுத்துவார் என்பது ஜோதிட உண்மை. அதே நேரத்தில் ஒரு ஜாதகத்தில் செவ்வாய் பல பெற்றிருந்தால் நிறைய நிலம், வீடு இவற்றிற்கு அதிபதியாகவும் அதிகார பதவியில் உள்ளவராகவும் இருப்பார்கள்.



இந்த செவ்வாய் கிரக தோஷத்தினைப் போக்கும் எளிய பரிகாரங்களை நம் முன்னோர்கள் வகுத்து வைத்திருக்கிறார்கள். அதாவது, செவ்வாய் தோஷம் உள்ள ஒருவர் உக்கிர குணமும் எதிர்வாதம் செய்பவராகவும் இருப்பார். இது குணத்தினை பாதிக்கும் தோஷம். உரிய காலத்தில் திருமணம் கைகூடாமல் தள்ளிப்போவதே பெரிய குறையாக இருக்கும். இது வாழ்க்கையை பாதிக்கும் தோஷம்.

குணநலன் மாற, இவர்கள் கார உணவைத் தவிர்த்து துவர்ப்பான உணவை உண்ண வேண்டும். அதே போல செண்பக மலரின் மணம் இவர்களது வாழ்க்கையில் நல்ல மாற்றத்திணைக் கொடுக்கும். முழு துவரையை சிவப்புத் துணியில் முடிந்து 9 நாள்

இரவு தலை மாட்டில் வைத்துப் படுத்து, 10ம் நாள் அதை ஓடும் நீரில் விடவேண்டும். இதைத்தவிர கருங்காலி கட்டை, காப்பர் பாத்திரம் என பல பரிகாரங்கள் உண்டு.

தகுந்த ஜோசியர் மூலம் ஜாதகப்படி நடக்கும் தினபுத்தி அறிந்து யாகம், ஆலயம் என பரிகாரங்கள் செய்தால் செவ்வாய் கிரகத்தின் தோஷம் மாறி, நன்மைகள் உண்டாகும். ஜோதிடரின் துணை கொண்டு செவ்வாய் தோஷம் நீக்குவோம்.

~ ஜோதிடர் M மீனாட்சி சுந்தரம்.

# பிரசன்னம் என்றால் என்ன

பிரசன்னம் என்ற வடமொழி சொல்லிற்கு கேள்வி என்று பொருள். ஒருவர் தன்னைச் சார்ந்த நற்செயலுக்கான காரியங்களுக்காகவோ, தனக்கும். தன் சார்ந்தவர்களுக்கும் பாதுகாப்பு, நோக்கிலோ, கேள்வியை தேய்விக்யனிடம் கேட்கும் பொழுது அது பிரசன்னமாக மாறுகிறது. பிரசன்னம் என்ற சொல்லுக்கு கேள்விக்கு பதில் உரைத்தல் என்றும் பொருளாகும்.

## பிறப்பு ஜாதகம்

ஒருவர் பிறந்த நேரத்தின் அடிப்படையில் கணிக்கப்படுவது பிறப்பு ஜாதகம் ஆகும்.

## பிரசன்ன ஜாதகம்

ஒருவர் கேள்வி கேட்கும் நேரத்தில் கணிக்கப்படுவது பிரசன்ன ஜாதகம் (அன்றைய கோள்களின் அடிப்படையில்).

பிரசன்னத்தில் 108 முறைகள் இருப்பதாக முன்னோர்களும் எனது பிரசன்ன குருவாகிய கல்வித்தந்தை ”ஸ்ரீல ஸ்ரீம் விருதுநகர் ஜாம்பவான் சுவாமிகளும்” கூறியுள்ளார்கள்.

இந்த பிரசன்ன முறைகளில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது, மனிதர்களுக்காக பார்க்கப்படுவதில், தனிமனிதனுக்காக பார்க்கப்படுவது ”சாமான்ய பிரசன்னமும்”.

”தாம்பூல பிரசன்னமும்” இதில் ஒரு குடும்பத்திற்காகவோ, அவர்களின் தலைமுறைகளுக்காக பார்க்கப்படுவது ”அஷ்ட மங்கல பிரசன்னம்”.

இறைவனுக்காக மட்டும் அதாவது குலதெய்வத்திற்க்காகவோ, பொதுமக்கள் வழிபடும் கோவிலுக்கான கேள்விகளுக்காக்கவோ பார்க்கப்படுவது ”தேவ மங்கள பிரசன்னம்” ஆகும்.

கிரகங்கள், அவற்றின் குணங்கள், காரகத்துவங்கள், கிராக சஞ்சாரங்கள், பஞ்சாங்கத்தினுடைய தெளிவு. இவற்றையெல்லாம் நன்றாக கற்றுனந்து. பிரசன்னம் கற்றுத்தந்த குருவை மனதார வணங்கி, குரு

பக்தியுடன் பிரசன்னத்தை முழுமையாக கற்றுனர்ந்து பிரசன்னத்தை பார்க்க ஆரம்பிக்க வேண்டும்.

சூரிய உதயத்திற்கு முன் எழுந்து, உடலை சுத்தம் செய்த பின், தாய், தந்தையர்கள், குலதெய்வம், குருமார்கள், இஷ்ட தெய்வங்கள் இவர்களையெல்லாம் மனதில் நினைத்து வணங்கி நவ கிரகங்களைத் தொழுது. பதட்டமில்லாத மனதுடன் பிரசன்னம் பார்ப்பதற்காக அன்றைய கோள்களின் சஞ்சார நிலைகளை முழுமையாக கணித்து. தயார் நிலையில் கிழக்கு நோக்கி தெய்வயக்ஞன் அமர்ந்து. பிரசன்னம் பார்க்க வருபவர்களுக்காக காத்திருக்க வேண்டும்.

பிரசன்ன பலகை 2 1/2 அடி நீளமும், 1 1/4 அடி அகலம் கொண்ட பினைப்பு, வெடிப்பு, கரும்புள்ளிகள் இல்லாத பலா அல்லது தேக்கு மரத்திலான பலகையை பயன்படுத்த வேண்டும்.

சுத்தம் செய்யப்பட்ட மந்திரங்கள் ஜெபித்த சோழிகளைக் கொண்டு பிரசன்னத்திற்கு பயன் படுத்த வேண்டும். பிரசன்ன பலகையை இடதுபக்கம் அதாவது வடக்கு பகுதியில் சூரிய சந்திரர்களுக்கு இரண்டு சோழிகளையும், பஞ்ச தெய்வங்களுக்கு 5 சோழிகளையும் அவற்றிட்க்கு கீழ் சிறு சோழிகளாக 108 சோழிகளும்



இந்த 108 சோழிகளுக்கு உதவிக்காக ஒரு சில சோழிகளையும் குறைத்த பட்சம் வைத்திருக்க வேண்டும். இத்துடன் வலது பக்கம் அதாவது தெற்கு பகுதியில் "ஓம்" என்று வரைத்து. ஒம்க்கு கீழ் ராசி சக்கரம் வரைந்து அந்த ராசி சக்கரத்தில் 9 கிரகத்திற்கும் அன்றைய கோள் நிலைப்படி சோழிகளை நிறப்ப வேண்டும்.

இத்துடன் மாந்திக்கு 1 சோழியும், உதய லக்னத்திற்கு 1 சோழியும் ஆருடத்திற்க்காக 1 சோழியும் தயார் நிலையில் இருக்க வேண்டும்.

சொர்ண ஆருடத்திற்கு 1 சோழி, ஸ்பரிச ராசிக்கு 1 சோழி வெற்றிலை ஆருடத்திற்கு 1 சோழிகளையும். மாந்தியை வைத்து பிரசன்னம் பார்க்க தோராயமாக 247 சோழிகளையும் கொண்டு பிரசன்னம் பார்க்கலாம்.

"ஆதித்யம் அம்பிகாம் விஷ்ணும் கணனாதம் மஹேஸ்வரம்! பஞ்சதெய்வான் ஸமரேன் நித்யம் சர்வ அபிஷ்ட அர்த்த சித்தயே" என்று தியானம் செய்து ஐந்து தெய்வீக சோழிகளை வணங்கி வரிசையாக பலகை மேல் வைத்து 108 சோழிகளை இரண்டு கையாலும் தொட்டு "ஓம் நமசிவாய" என்று பஞ்சாட்ஷரத்தை 108 முறை சொல்லி வணங்கி வேண்டும்.

மேற்கூறியது நித்யப்படி செய்ய வேண்டிய காரியமுறையாகும், அனால், முதன் முதலாக சோழியை வைத்து பிரசன்னம் பார்ப்பதனால் சோழிகளை வணங்கி பக்தியுடன் முதலில் பாலில் கொதிக்க வைக்க வேண்டும். பின் தண்ணீர், பன்னிர், பஞ்சகவ்யம், அதன்பிறகு தண்ணீர், மஞ்சள் நீர் மற்றும் கடைசியாக தண்ணீரிலும் கழுவி துடைத்து (துடைப்பதற்கு தனி துணியை வைத்துக் கொள்ளவும்) சுத்தம் செய்ய வேண்டும்.

தினமும் பாலில் கழுவிய பிறகு. தண்ணீரிலும் நன்றாக கழுவி சுத்தம் செய்து குறைந்தது ஒரு மண்டல காலத்திற்காவது கிழக்கு திசையைப் பார்த்து உட்கார்ந்து சோழியை பலகையின் மேல் வைத்து கைகளால் மூடிக் கொண்டு 108 ஆவர்த்தி பஞ்சாட்ஷரம் ஜெபித்து நம்முடைய உபாசனை வலுவை சோழிக்கு ஏற்ற வேண்டும்.

நம்முடைய சோழிகளை மற்றவர்கள் உபயோகிக்க கூடாது. தினமும் சோழியை தொட்டு பஞ்சாட்ஷரம் மட்டுமல்லாமல், தங்களுடைய குலதெய்வ மந்திரங்களும் சொல்லாம். எவ்வளவு உரு ஏற்றுகின்றீர்களோ அவ்வளவுக்கு உங்கள் உபாசனை பலம் சோழியில் பதிந்து உண்மைகளை காட்டித்தரும்.

உச்சி வேளைக்கு முன் பிரசன்னம் பார்ப்பது மிக உத்தமம்.

தனிமனிதனுக்காக சாமான்ய பிரசன்னம்மோ, தாம்பூல பிரசன்னம்மோ பார்த்தால் போதுமானது. இதில் தாம்பூல பிரசன்னத்தை மட்டும் எந்த நேரத்திலும் (பகல், இரவு) பார்க்கலாம்.
குடும்பத்திற்காகவோ, குடும்ப முக்கிய காரியங்களுக்காகவோ "அஷ்ட மங்கல பிரசன்னம்" பார்க்கலாம்.

# அஷ்ட மங்கள பிரசன்னம்

பிரசன்னம் என்பது ஜாதகர் வந்து பிரசன்னம் பார்ப்பதற்காக தெய்வயக்ஞனிடம் கூறும் நேரம் அல்லது தாம்பூலத்துடன் காணிக்கை கொடுத்து பிரசன்னம் பார்க்கும்படி தெய்விக்ஞனிடம் அழைக்கும் நேரம் பிரசன்னம் ஆரம்பம்.

அன்றைய தேதி நேரம் இவற்றைக்குறித்துக் கொண்டு பலன்களை ஆரம்பிக்க வேண்டும். எந்தவிதமான பிரசன்னமாக இருந்தாலும் பிரஜை தான் அனைத்திற்கும் ஆரம்பம்.

பிரஜகர் வந்து சுப நாளில் பிரசன்னத்திற்கு அழைத்தாலும், சுப நாட்கள் இல்லாத நாட்களில் அழைத்தாலும், அழைத்த நாளில் அமைப்பையே பிரசன்னத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டும்.

## உதாரணமாக:

ரிக்தா திதியில் (சதுர்த்தி, சதுர்தசி, அஷ்டமி, நவமி) வந்து அழைத்தாலும், பிரசன்னம் பார்க்கும் நாள், சுப நாளாக அழைத்தாலும், ரிக்தா திதியின் அமைப்பே பிரசன்னம் ஆரம்பம்.

இந்நாளில் தான் வர வேண்டும் என்பது பிரஜகருக்கு தெரியாது, அனால் இவைகளைப்பற்றி தெய்வயக்ஞன் முழுவதுமாய் தெரிந்து வைத்திருக்க வேண்டும். பொதுவாக, சனி மற்றும் செவ்வாய் கிழமைகளில் தவிர்ப்பது நன்று. அதேபோல் அவர்களின் ஜனன நட்சத்திரத்திற்கு தாரா பலன் உள்ள நாட்களான நல்ல நட்சத்திரமுள்ள நாளில் வந்து பிரசன்னம் கேட்டால், அவர்களுக்கு நட்பலன்கள் வரக்கூடும்.

மதிய வேளையில் பிரஜை வந்தால் அவர் கர்ம பலனை அனுபவித்து தீர்த்துவிட்டார் என்றும், அஸ்தமன வேளையில் வந்தால் பிதுர்தோஷம் உள்ளது என்று கருத வேண்டும்.

~ கணியன் A N ராஜசேகரன்

# ஜூலை மாத ராசிபலன்கள் – 2020



## மேஷம்

மேஷ ராசியில் பிறந்தவர்களுக்கு இந்த மாதத்தில் தைரியம் மற்றும் தன்னம்பிக்கை குறைந்து காணப்படும். சில சமயங்களில் உங்கள் மனதில் குழப்பம் நிறைந்து காணப்படும். எனவே, இப்போது நீங்கள் எந்த செயலைச் செய்தாலும் கவனமாக இருக்க வேண்டியிருக்கும். உங்கள் உடன்பிறப்புகளுடன் பழகும்போது எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று உங்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது. இந்த மாதம் பணப்புழக்கம் தாராளமாக இருக்கலாம். குடும்ப வாழ்க்கையும் மகிழ்ச்சியாக இருக்கும். கணவன் மனைவிக்கு இடையிலான உறவும் மகிழ்ச்சிகரமாக இருக்கும். குறிப்பாக, பெண்கள் மூலம் உங்களுக்கு பல லாபங்களும் மகிழ்ச்சியும் கிட்டும். நீங்கள் தொழிலில், உங்கள் குறிக்கோள்களையும் அபிலாஷைகளையும் அடைய மிகவும் கடினமாக முயற்சி செய்வீர்கள். இந்த மாதம் நீங்கள் தொழிலில் சிறந்த இலாபங்களை ஈட்டக்கூடும். அதேசமயம் அரசாங்கத்துடன் தொடர்புடைய பணிகள் சிறப்பாக செயல்படக்கூடும். வாழ்வாதாரம் பொதுவாக சுமூகமாக இருக்கும். இந்த மாதம் நீங்கள் ஆன்மீகத்தில் அதிக ஆர்வத்தை வளர்த்துக் கொள்வீர்கள்.

சுப நாட்கள்: 5,6,9,10,23,24

அசுப நாட்கள்: 2,3,4,11,12,13,25,26,30,31

**பரிகாரங்கள்:** முருகப் பெருமான், மற்றும் ஸ்ரீ நரசிம்மருக்கு பூஜை மற்றும் ஆலய வழிபாடு செய்யுங்கள். செவ்வாய் (அங்காராகன்), சனி, குரு , ராகு மற்றும் கேது பகவானுக்கு பூஜை மற்றும் ஹோமம் செய்யுங்கள். நாய் மற்றும் பறவைகளுக்கு தண்ணீர் அளியுங்கள். ஏழைகளுக்கு மருத்துவ உதவி செய்யுங்கள்.




# ரிஷபம்

ரிஷப ராசி அன்பர்களுக்கு இந்த மாதம் சிறந்த அதிர்ஷ்டம் காணப்படும். உங்களின் சில செயல்கள் காரணமாக நீங்கள் சிலரை விரோதித்துக் கொள்ள நேரும். குடும்ப வாழ்க்கையில் அமைதி கெட வாய்ப்புள்ளது. எனவே நீங்கள் தேவையற்ற பேச்சுக்களை தவிர்க்க வேண்டும். உங்கள் வருமானம் சுமாராக இருக்கும். வெளியிடங்களுக்கு பயணம் செய்ய அதிக பணம் செலவு செய்வீர்கள். நீங்கள் வேலையில் தடைகளை சந்திக்க நேரிடலாம், ஆனால் இது தற்காலிக தடையாக இருக்கும். சிறிய அளவிலான ஆரோக்கியப் பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புள்ளது. தொழில் லாபகரமாக இருக்கும். மூதாதையர் சொத்து தொடர்பான பிரச்சினைகள் முடிவுக்கு வரக்கூடும். குழந்தைகள் தங்கள் படிப்பில் சிறப்பாக செயல்படுவார்கள், இது உங்களுக்கு மகிழ்ச்சியைத் தரக்கூடும். உங்கள் தந்தையின் ஆரோக்கியம் சீராக இருக்கும். உங்களில் சிலருக்கு இப்போது சில அதிர்ஷடம் கிடைக்க வாய்ப்புகள் உள்ளன. உங்கள் மதிப்பும் கௌரவமும் அதிகரிக்கும்.

சுப நாட்கள்: 7,8,11,12,13,25,26

அசுப நாட்கள்: 1,5,6,14,15,27,28,29

**பரிகாரங்கள்:** நீங்கள் ஆலயம் சென்று குல தெய்வம் மற்றும் ஸ்ரீ லக்ஷ்மி நரசிம்மரை வழிபடுங்கள் சனி பகவான், குரு பகவான், ராகு மற்றும் கேது பகவானுக்கு ஹோமம் மற்றும் பூஜை செய்யுங்கள். பெற்றோர் மற்றும் குருமார்களின் ஆசிகளைப் பெறுங்கள். ஏழை மற்றும் தேவைப்படுவோருக்கு மருத்துவ உதவி செய்யுங்கள். புற்றுக்கு பால் ஊற்றுங்கள்.



# மிதுனம்

மிதுன ராசியில் பிறந்தவர்களுக்கு இந்த மாதம் ஒரு சிக்கலான மாதமாகும். பண விஷயங்கள் மற்றவர்களுடன் கசப்பான உணர்வுகளுக்கு வழிவகுக்கும். நீங்கள் மிகவும் குழப்பமாக இருப்பீர்கள். உங்கள் எண்ணங்களிலும் செயல்களிலும் அதிக தெளிவு இருக்காது. இது உங்கள் தொழிலுக்கு இடையூறாக இருக்கலாம். நீங்கள் பலவீனத்தால் பாதிக்கப்படலாம். எனவே, உங்கள் உடல் மற்றும் மன நிலை இரண்டிற்கும் சிறப்பு கவனிப்பு தேவைப்படலாம். செலவுகள் அதிகரிக்கக்கூடும். இவை முக்கியமாக குழந்தைகள் காரணமாக இருக்கலாம். எனவே, நீங்கள் செலவினங்களைக் கட்டுப்படுத்த வேண்டும். நீங்கள் எதிரிகளிடமிருந்தும் சிக்கலை எதிர்கொள்ளக்கூடும். இந்த சிக்கல்களை உங்களால் சமாளிக்க இயலும் உங்கள் முயற்சிகளின் மூலம், உங்கள் கீழ்பணி புரிவோரின் தவறான புரிதல்களையும் நீங்கள் அகற்றுவீர்கள்.

சுப நாட்கள்: 3,4,12,13,17,18,30
அசுப நாட்கள்: 5,6,9,10,11,19,20,21

**பரிகாரங்கள்:** ஆலயம் சென்று ஆஞ்சநேயர் மற்றும் ஆதி சேஷனை வழிபட்டு பூஜை அர்ச்சனை செய்யுங்கள். புத பகவான், குரு பகவான், சனி பகவான், மற்றும் ராகு கேது ஹோமம் மற்றும் பூஜை செய்யுங்கள் பாம்பு புற்றிற்கு பால் ஊற்றுங்கள். மேலும் முதியோர்கள், உடல் ஊனமுற்றோர் மற்றும் ஆதரவற்றோருக்கு உதவி புரியுங்கள்.



# கடகம்

கடக ராசியில் பிறந்தவர்களுக்கு இந்த மாதம் பொருளாதார ரீதியாக சிறந்த பலன்கள் கிடைக்கும். இருப்பினும், குடும்ப வாழ்க்கையில் சில தவறான புரிதல்களுக்கான வாய்ப்புகள் உள்ளன. நீங்கள் ஒரே நேரத்தில் பல பணிகளைச் செய்ய வேண்டியிருக்கலாம். எனவே, நீங்கள் பணியில் கவனமாக இருக்க வேண்டும். பொதுவாக உங்கள் தொழிலிலும் எச்சரிக்கை தேவை. பணிச்சுமையும் அதிகமாக இருக்கலாம் மற்றும் உங்கள் தனிப்பட்ட தேவைகளுக்கு போதுமான நேரத்தை ஒதுக்க இயலாது. இதன் காரணமாக சில ஆரோக்கியப் பிரச்சினைகளும் அதன் விளைவாக ஏற்படும் செலவுகளுக்கும் வழிவகுக்கும். உங்களில் சிலர் குறுகிய பயணங்கள் சம்பந்தமான செலவுகளை மேற்கொள்ள நேரும். ஆனால் நீங்கள் எல்லா சவால்களையும் நம்பிக்கையுடன் எதிர் கொண்டு சமாளிப்பீர்கள்.

சுப நாட்கள்: 2,3,4,11,12,13,16,17,18,30,31

அசுப நாட்கள்: 5,6,9,10,19,20

**பரிகாரங்கள்:** திருப்பதி ஏழு மலையானை தரிசனம் செய்து பூஜை மேற்கொள்ளுங்கள். மேலும் ஆஞ்சநேயருக்கு பூஜை மற்றும் வழிபாடு மேற்கொள்ளுங்கள். சனி பகவான், குரு பகவான், ராகு மற்றும் கேது பகவானுக்கு பூஜை மற்றும் ஹோமம் செய்யுங்கள் மீன்களுக்கு உணவிடுங்கள். ஏழைக் குழந்தைகளின் முன்னேற்றத்திற்கு உதவுங்கள்.




# சிம்மம்

சிம்ம ராசி அன்பர்களுக்கு இந்த மாதம் நன்மை பயக்கும் மாதமாக இருக்கும். பணியில் இருக்கும் சிம்ம ராசி அன்பர்கள் முன்னேற்றங்களை எதிர்பார்க்கலாம். தொழில் நடவடிக்கைகள் மிகவும் நம்பிக்கைக்குரியதாக இருக்கும். மேலும் எதிர்காலத்தில் நன்மை பயப்பதாக இருக்கும். நீங்கள் தொழிலில் பல இலாபகரமான வாய்ப்புகளையும் பெறலாம். சில சமயங்களில் பணியிடச் சூழல் உங்கள் பொறுமையை சோதிக்கக்கூடும். என்றபோதிலும் நீங்கள் உங்கள் நம்பிக்கையை இழக்காமல் கடினமாக உழைப்பதன் மூலம் அதிக உற்பத்தித் திறனை அடைய இயலும். குடும்ப விஷயங்களை பொறுமையுடன் கையாள்வது நல்லது. இளைய உடன்பிறப்புகள் காரணமாக நீங்கள் சில இழப்புகளை சந்திக்க நேரும். நீங்கள் நல்ல ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள். ஆனால் தாயின் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டியிருக்கும்.

சுப நாட்கள்: 5,6,14,15,19,20
அசுப நாட்கள்: 7,8,11,12,13,21,22

**பரிகாரங்கள்:** ஆலயம் சென்று சிவன் வழிபாடு மற்றும் ஸ்ரீ கால பைரவர் வழிபாடு செய்யுங்கள் சனி பகவான், குரு பகவான், ராகு மற்றும் கேது பகவானுக்கு பூஜை மற்றும் ஹோமம் செய்யுங்கள். ஆதரவற்ற குழந்தைகள் மற்றும் உடல் ஊனமுற்றவர்களுக்கு உதவி செய்யுங்கள்.



# கன்னி

கன்னி ராசியில் பிறந்தவர்களுக்கு இந்த மாதத்தில் நல்ல மற்றும் தீய பலன்கள் கலந்து இருக்கும். உங்களின் வருமானம் சிறப்பாக இருக்கும். உடன்பிறப்புகள் மூலம் லாபம் காண்பீர்கள். உங்கள் உடல் ஆரோக்கியம் மேம்படும். தந்தையின் உடல்நிலை சீராக இருக்கும். உங்கள் தாய் மற்றும் மனைவியின் உடல்நலம் குறித்து கவனம் தேவைப்படும். திருமண வாழ்க்கையில் நீங்கள் ஒரு சில பின்னடைவுகளை சந்திக்க நேரும். பொது வாழ்க்கையிலும் சில  சிக்கல்கள் வருவதற்கு வாய்ப்பு உள்ளது. ஆனால் அது வந்த வேகத்திலேயே மறைந்துவிடும். தொழில் வழக்கம் போல் தொடரும். தொழிலில் லாபம் பெறுவதில் தடைகள் காணப்படும். பணி புரியும் கன்னி ராசி அன்பர்களில்  ஒரு சிலருக்கு வேலையில்  இடமாற்றங்கள் இருக்கும். நீங்கள் குடும்பத்துடன் வெளிநாட்டு பயணத்தை மேற்கொள்வீர்கள். வாகனங்கள் வாங்குவதற்கான வாய்ப்புகளும் உள்ளன.

சுப நாட்கள்: 7,8,16,17,18,21,22

அசுப நாட்கள்: 9,10,14,15,23,24

**பரிகாரங்கள்:** ஆலயம் சென்று துர்க்கை மற்றும் ஆஞ்சநேயரை வழிபடுங்கள்.
சனி பகவான், குரு பகவான், ராகு மற்றும் கேது பகவானுக்கு பூஜை மற்றும் ஹோமம் செய்யுங்கள். ஆதரவற்ற குழந்தைகளுக்கு கல்வி, மருத்துவம் மற்றும் பண உதவி செய்யுங்கள். ஆலயங்களில் சேவை செய்யுங்கள்.




# துலாம்

துலாம் ராசியில் பிறந்தவர்கள் இந்த மாதம் பொதுவாக தங்களுக்கு சாதகமாக இருப்பதைக் காண்பார்கள். இந்த மாதம் பணப்புழக்கம் சரளமாக இருக்கும். வேலை செய்யும் துலாம் ராசி அன்பர்கள் தங்கள் பணியில் முன்னேற்றங்களைக் காண்பார்கள். தொழில் செய்யும் அன்பர்கள் கடின உழைப்பு மற்றும் தொடர்ச்சியான முயற்சிகளில் ஈடுபட்டு லாபம் ஈட்டுவார்கள். ஆனால் தொழிலில் சிறிது காலம் மந்த நிலை இருக்கும். உங்களில் சிலருக்கு தாயின் மூலம் ஆதாயங்களைப் பெறும் வாய்ப்பும் கிட்டும். இளைய உடன்பிறப்புகளிடமிருந்தும் நீங்கள் நன்மைகளை எதிர்பார்க்கலாம். தந்தையின் ஆரோக்கியமும் மேம்படக்கூடும். ஆனால் காதல் விவகாரங்களை கவனமாக கையாள வேண்டியிருக்கும். கணவன்-மனைவி இடையேயான பிணைப்பும் சீராக இருக்காது. சில குடும்ப உறுப்பினர்களுடன் நீதிமன்ற வழக்குகளில் ஈடுபடுவதற்கான சில சாத்தியங்கள் உள்ளன. இருப்பினும், உங்களில் ஒரு சிலர் அதிர்ஷ்டத்தை எதிர்பார்க்கலாம்.

சுப நாட்கள்: 9,10,19,20,23,24
அசுப நாட்கள்: 11,12,13,16,17,18,25,26

**பரிகாரங்கள்:** ஆலயம் சென்று லக்ஷ்மி நரசிம்மன் மற்றும் ஆஞ்சநேயருக்கு பூஜை செய்து வழிபாடு மேற்கொள்ளுங்கள் சுக்கிர பகவான், சனி பகவான் குரு பகவான், ராகு மற்றும் கேது பகவானுக்கு பூஜை மற்றும் ஹோமம் செய்யுங்கள். ரத்த தானம் செய்யுங்கள். ஏழை மற்றும் தேவைப்படுவோருக்கு மருத்துவ உதவி செய்யுங்கள்



# விருச்சிகம்

விருச்சிக ராசியில் பிறந்தவர்கள் இந்த மாதத்தில் ஓரளவு நல்ல பலன்களை பெறுவார்கள். இந்த மாதம் நீங்கள் குடும்பத்தில் பல சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கலாம். உங்கள் தனிப்பட்ட வாழ்க்கை மற்றும் வேலை இரண்டுமே சவால்கள் நிறைந்ததாக இருக்கும். உங்கள் கவனக்குறைவு காரணமாக நீங்கள் வேலையில் சில நல்ல வாய்ப்புகளை இழக்க நேரிடும். வியாபாரத்தில் இலாபங்கள் பாதிக்கப்படலாம் அல்லது தாமதமாகலாம். உங்கள் வாழ்க்கைத் துணை காரணமாக நீங்கள் செலவுகளை சந்திக்க நேரிடும். எனவே, இந்த காலகட்டத்தில் நீங்கள் திடமாக நின்று மிகவும் கடினமாக போராட வேண்டியிருக்கும். நீங்கள் விரும்பினால் நிலைமையை உங்களுக்கு சாதகமாக ஆக்கிக் கொள்ளலாம். ஆனால் இந்த கடினமான அனுபவங்கள் உங்களுக்கு தைரியத்தையும் உறுதியான மனநிலையையும் அளிக்கும். நம்பிக்கையுடன் செயல்படுங்கள். திருமணத்திற்கு காத்திருக்கும் உங்களில் சிலருக்கு திருமணம் கை கூடி வரும்.

சுப நாட்கள்: 11,12,13,21,22,25,26

அசுப நாட்கள்: 1,14,15,19,20,27,28,29

**பரிகாரங்கள்:** ஆலயம் சென்று முருகன் மற்றும் துர்க்கை வழிபாடு மற்றும் பூஜை செய்யுங்கள். செவ்வாய் பகவான், சனி பகவான், குரு பகவான் மற்றும் ராகு கேது பகவானுக்கு பூஜை மற்றும் ஹோமம் செய்யுங்கள். சித்தர் சமாதி சென்று சேவை ஆற்றுங்கள். பாம்பு புற்றிற்கு பால் ஊற்றுங்கள்.



# தனுசு

தனுசு ராசியில் பிறந்தவர்களுக்கு இந்த மாதம் நன்மை தீமை இரண்டும் கலந்த பலன்கள் காணப்படும். பணப்புழக்கம் சரளமாக இருக்காது. காதல் உறவை கவனமாக கையாளுதல் வேண்டும். இளைய உடன்பிறப்புகளின் காரணமாக பிரச்சினைகள் வளரக்கூடும். ஆனால் தொழில் முன்னேற்றம் திருப்திகரமாக இருக்கும். உங்கள் வழக்கமான பொறுப்புகளை நிறைவேற்றுவதில் கூட நீங்கள் காட்டும் தீவிர ஈடுபாடு மற்றவர்களைக் கவரும். அவர்கள் உங்களுடன் சேர்ந்து செயலாற்ற விரும்புவார்கள். உங்கள் இரகசிய எதிரிகளைக் கூட நீங்கள் வென்று அவர்களுடன் நட்பை உருவாக்க முடியும். உங்களில் சிலர் உத்தியோகபூர்வ சுற்றுப்பயணங்களுக்கு செல்ல வாய்ப்பு உள்ளது. இன்னும் சிலர் ஆடம்பரமான பொருட்களில் ஆர்வத்தை வளர்த்துக் கொள்வீர்கள். வாழ்க்கையில் அதிக மகிழ்ச்சி காண இது சரியான நேரமாகும். உங்கள் ஆரோக்கியத்தில் ஏற்ற இறக்கங்கள் இருக்கும்.

<u>சுப நாட்கள்:</u> 1,14,15,23,24,27,28,29

<u>அசுப நாட்கள்:</u> 2,3,4,16,17,18,21,22,30,31

**பரிகாரங்கள்:** ஆலயம் சென்று தட்சிணா மூர்த்தியை வழிபாடுங்கள். சித்தர் சமாதி சென்று தரிசனம் செய்யுங்கள் குரு பகவான், சனி பகவான், மற்றும் ராகு கேது பகவானுக்கு பூஜை மற்றும் ஹோமம் செய்யுங்கள். சாதுக்களுக்கு உதவுகள். ஆலயத்திற்கான சேவை மேற்கொள்ளுங்கள். நாய்களுக்கு உணவளியுங்கள்



# மகரம்

இந்த மாதத்தில் மகர ராசியில் பிறந்தவர்களுக்கு சில கவலைகள் அல்லது சிக்கல்கள் தொந்தரவுகளை ஏற்படுத்தலாம். ஒரு சிலர் தலைவலி மற்றும் குழப்பங்களால் கூட பாதிக்கப்படலாம். இளைய உடன்பிறப்புகள் உங்கள் மனதில் சில கசப்பான உணர்வுகள் ஏற்பட காரணமாக இருப்பார்கள். மேலும் வீணான செலவுகள் அல்லது இழப்புகளையும் நீங்கள் சந்திக்க நேரும். நீங்கள் சிறு வியாதிகளால் பாதிக்கப்படலாம். அதே நேரத்தில் தாயின் ஆரோக்கியத்திலும் கவனம் தேவைப்படலாம். நிலங்கள் அல்லது வாகனங்கள் சம்பந்தமான வழக்குகளுக்கு வாய்ப்புகள் உள்ளன. தொழில் நடவடிக்கைகளில் நீங்கள் கவனமாக இருக்க வேண்டும். இருப்பினும் நீங்கள் அதில் லாபம் சம்பாதிக்கலாம். குடும்ப உறவுகள் சுமுகமாக இருக்கும். அதே நேரத்தில் குழந்தைகளுக்கும் சில நன்மைகள் விளையும். நீங்கள் ஆன்மீகத்தில் அதிக ஈடுபாடு கொள்வீர்கள். உங்களில் சிலர் புனித ஸ்தலங்களுக்கான யாத்திரை மேற்கொள்வீர்கள்.

சுப நாட்கள்: 2,3,4,17,18,25,26,30,31

அசுப நாட்கள் 5,6,19,20.23,24

**பரிகாரங்கள்:** ஆஞ்சநேயர், மற்றும் முருகப் பெருமானுக்கு பூஜை மற்றும் வழிபாடு மேற்கொள்ளுங்கள். ஆலயம் சென்று வழிபடுங்கள். குரு பகவான், சனி பகவான், ராகு மற்றும் கேது பகவானுக்கு ஹோமம் மற்றும் பூஜை மேற்கொள்ளுங்கள். ஏழை மாணவர்களின் கல்விக்கு உதவி செய்யுங்கள். முதியோர்கள் மற்றும் உடல் ஊனமுற்றவர்களுக்கு முடிந்த உதவி செய்யுங்கள்.



# கும்பம்

கும்ப ராசி அன்பர்களுக்கு இந்த மாதத்தில் அவர்களின் நிதி மற்றும் தொழிலைப் பொறுத்தவரை சூழ்நிலை வலுவாக இருப்பதைக் காணலாம். நீங்கள் தாயின் தரப்பிலிருந்து ஆதாயங்களைப் பெறலாம். சிலர் வாகனங்களை வாங்கலாம். காதல் விவகாரங்களில் சில தடைகளை எதிர்கொள்ளக்கூடும். ஆனால் உங்கள் காதல் உறவு வெற்றிகரமாக திருமணமாக முடிவடையும். திருமணமானவர்கள் குழந்தைப் பேற்றிற்கான பாக்கியத்தைப் பெறலாம். உங்கள் தந்தையின் உடல்நிலை உங்கள் மனதில் கவலையை ஏற்படுத்தக்கூடும். பணியில் இருக்கும் கும்ப ராசி அன்பர்கள் இந்த மாதம் மிதமான அதிர்ஷ்டத்தை எதிர்பார்க்கலாம். தொலைதூர நாடுகளிலிருந்து நீங்கள் அழைப்புகளைப் பெறலாம். மேலும் உங்களில் சிலர் கோரிக்கைகளுக்கு மதிப்பளிப்பதற்காக தொலைதூர இடங்களுக்குச் செல்லலாம். இந்த மாதம் உங்களுக்கு செலவுகள் அதிகமாக இருக்கும். அதன் காரணமாக நீங்கள் பற்றாக்குறையை சந்திக்க நேரும். புதிய தொழில் தொடங்க உங்களுக்கு சாத்தியங்கள் உள்ளன. ஆனால் தொழில் நடவடிக்கைகளில் நீங்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். நீங்கள் ஆலயங்களுக்கு புனித யாத்திரை மேற்கொள்வீர்கள்.

சுப நாட்கள்: 1,5,6,19,20,27,28,29

அசுப நாட்கள்: 7,8,21,22,25,26

**பரிகாரம்:** ஆஞ்சநேயர் மற்றும் முருகருக்கு பூஜை செய்யுங்கள். ஆலயம் சென்று வழிபடுங்கள். குரு சனி மற்றும் ராகு-கேது பகவானை வழிபடுங்கள். அவர்களுக்கான பூஜை மற்றும் ஹோமம் செய்யுங்கள். ஏழை. முதியோர், உடல் ஊனமுற்றோர், ஆதரவற்றோர் மற்றும் உதவி தலைப்படுவோருக்கு உதவி புரியுங்கள். மேலும் அன்னதானம் செய்யுங்கள்.



# மீனம்

மீன ராசியில் பிறந்தவர்கள் இந்த மாதத்தில் பெயர், புகழ் மற்றும் மரியாதை ஆகியவற்றை பெறுவார்கள். இந்த மாதம் நீங்கள் உங்கள் எல்லா பணிகளையும் தைரியத்துடன் மேற்கொள்வீர்கள். உங்கள் தொழிலில் உங்கள் தகுதியை நிரூபிக்க இது சரியான நேரமாக இருக்கும். ஊதிய உயர்வு பெறுவீர்கள். அது உங்களுக்கு மன திருப்தியைத் தரும். நீங்கள் சமூகத்தில் புதிய தொடர்புகளையும் உருவாக்கிக் கொள்வீர்கள். உங்களில் சிலர் குறுகிய பயணங்களுக்கு செல்வீர்கள். உங்கள் ஆரோக்கியம் சாதாரணமாக இருக்கும். உங்கள் ஆரோக்கியத்தை தக்க வைக்க நீங்கள் கண்டிப்பான உணவு முறையைப் பின்பற்ற வேண்டும். நீங்கள் சில சமயம் பதட்டமான மன நிலையை சந்திப்பீர்கள். எனவே, எந்தவொரு முக்கியமான முடிவையும் தீர்மானிப்பதற்கு முன் நன்கு சிந்தித்து செயல்படுங்கள். குடும்பத்தில் சிறிய தவறான புரிதல்கள் உருவாகக்கூடும். ஆனால் இவை தற்காலிகமானதாக இருக்கும். இருப்பினும், நீங்கள் உடன்பிறந்தவர்களுடன் நல்லுறவு கொள்வீர்கள். உங்கள் தாயின் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

சுப நாட்கள்: 2,3,4,7,8,21,22,30,31

அசுப நாட்கள்: 1,9,10,23,24,27,28,29

**பரிகாரங்கள்:** திருச்செந்தூர் முருகனுக்கு பூஜை செய்து வழிபடுங்கள். சித்தர் ஆலயங்களுக்கு சென்று தரிசனம் செய்யுங்கள். குரு பகவான், சனி பகவான், ராகு மற்றும் கேது பகவானுக்கு பூஜை மற்றும் ஹோமம் செய்யுங்கள். நாய்க்கு உணவு அளியுங்கள். பாம்பு புற்றுக்கு பால் ஊற்றுங்கள். உடல் ஊனமுற்றோருக்கு உதவி செய்யுங்கள்.

~ ஜோதிடர் ஜெயம் ஜனார்தனன்